# பொருளடக்கம்


| வ.எண் | பாடத் தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|
| *1.* | எழுத்து இலக்கணம் | *01* |
| *2.* | சொல் இலக்கணம் | *17* |
| *3.* | பொருள் இலக்கணம் | *37* |
| *4.* | யாப்பு இலக்கணம் | *41* |
| *5.* | அணி இலக்கணம் | *53* |
| **அலகு *I* முதல் அலகு *VII* வரையுள்ள பாடத் தலைப்புகள்** | | |
| *6.* | பிரித்து எழுதுதல், சேர்த்து எழுதுதல் | *59* |
| *7.* | சந்திப்பிழை, எழுத்துப் பிழை, ஒற்றுப்பிழை அறிதல் | *75* |
| *8.* | குறில், நெடில் வேறுபாடு (தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும்) | *81* |
| *9.* | லகர, ளகர, ழகர வேறுபாடு - னகர, ணகர வேறுபாடு -ரகர, றகர வேறுபாடு (மயங்கொலிகள்) | *85* |
| *10.* | இன எழுத்துகள் | *99* |
| *11.* | சுட்டு எழுத்துகள் | *101* |
| *12.* | வினா எழுத்துகள் | *103* |
| *13.* | ஒருமைப் பன்மை அறிதல் | *115* |
| *14.* | வேர்ச்சொல் அறிதல் - வேர்ச்சொல்லில் இருந்து வினைமுற்று, வினையெச்சம், வினையாலணையும் பெயர், பெயரெச்சம் வகை அறிதல் | *121* |
| *15.* | அயற்சொல், தமிழ்ச்சொல் | *127* |
| *16.* | இரண்டு வினைச் சொற்களின் வேறுபாடு அறிதல் | *131* |
| *17.* | எதிர்ச்சொல் | *135* |
| *18.* | ஓரெழுத்து ஒரு மொழி, பொருள் தரும் ஓர் எழுத்து | *141* |
| *19.* | ஒருபொருள் தரும் பல சொற்கள், பல பொருள் தரும் ஒரு சொல் | *145* |
| *20.* | பொருந்தா சொல்லைக் கண்டறிதல் | *151* |
| *21.* | அகர வரிசைப்படி சொற்களைச்சீர்செய்தல் | *163* |
| *22.* | ஒருபொருள் பன்மொழி | *169* |

| | | |
|---|---|---|
| *23.* | இருபொருள் குறிக்கும் சொற்கள் | *171* |
| *24.* | பேச்சு வழக்கு - எழுத்து வழக்கு | *173* |
| *25.* | சொல்லும் பொருளும் | *179* |
| *26.* | கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுதல் | *191* |
| *27.* | ஊர்ப் பெயர்களின் மரூஉ | *203* |
| *28.* | பிழை திருத்துக | *205* |
| *29.* | பேச்சு வழக்கு தொடர்களிலுள்ள பிழை திருத்தம் | *211* |
| *30.* | சொற்களை இணைத்துப் புதிய சொல் உருவாக்குதல் | *217* |
| *31.* | அடைப்புக்குள் உள்ள இணைப்புச் சொல்லைத் தக்க இடத்தில் சேர்த்து எழுதுதல் | *223* |
| *32.* | சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடர் அமைத்தல் | *227* |
| *33.* | தொடர் வகைகள் - செய்வினை, செயப்பாட்டுவினை, வினை வகைகள் – தன்வினை, பிறவினை | *235* |
| *34.* | மரபுத்தமிழ் - திணை மரபு: உயர்திணை, அஃறிணை; பால் மரபு: ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்; காலம், இளமைப்பெயர், ஒலிமரபு, வினைமரபு, தொகைமரபு | *263* |
| *35.* | நிறுத்தல் குறியீடுகள்: கால்புள்ளி, அரைபுள்ளி, முக்கால் புள்ளி, முற்றுப் புள்ளி, வியப்புக் குறி, வினாக்குறி அமையும் இடங்கள் | *277* |
| *36.* | கலைச் சொற்கள் | *285* |
| *37.* | கொடுக்கப்பட்ட பத்தியில் இருந்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு சரியான விடையை தேர்ந்து எடுத்தல் | *315* |
| *38.* | உவமை தொடரின் பொருளறிதல், மரபு பொருளின் பொருளறிதல் | *343* |
| *39.* | பழமொழிகள் பொருளறிதல் | *359* |
| *40.* | ஆங்கிலம் மற்றும் பிறமொழி சொற்களுக்கு இணையான தமிழ் சொற்கள் அறிதல் | *367* |
| *41.* | திருக்குறள் | *383* |
| *42.* | அறநூல்கள் - பதினெண்கீழ்கணக்கு நூல்கள் | *435* |
| *43.* | தமிழின் தொன்மை, சிறப்பு, திராவிட மொழிகள் தொடர்பான செய்திகள் | *459* |
| *44.* | நூல் நூலாசிரியர்கள் | *481* |

# *I.எழுத்து இலக்கணம்*

## *1.முதலெழுத்தும் சார்பெழுத்தும்*

### *எழுத்துகள்*

- *எழுத்துகள் இரண்டு வகைப்படும்*
  1) *எழுத்துகள் வகைகள்*
  2) *முதல் எழுத்து  சார்பு எழுத்து*

### *முதல் எழுத்துகள்*

- *உயிர் எழுத்துகள் பன்னிரண்டு, மெய்யெழுத்துகள் பதினெட்டு ஆகிய முப்பது எழுத்துகளும் முதல் எழுத்துகள் ஆகும்.*
- *பிற எழுத்துகள் தோன்றுவதற்கும் இயங்குவதற்கும் முதற்காரணமாக இவை இருக்கின்றன. எனவே இவற்றை முதல் எழுத்துகள் என்பர்.*

### *சார்பு எழுத்துகள்*

- *முதல் எழுத்துகளைச் சார்ந்து வரும் எழுத்துகள் சார்பெழுத்துகள். இவை பத்து வகைப்படும்.*
  1) *உயிர்மெய்*
  2) *ஆய்தம்*
  3) *உயிரளபெடை*
  4) *ஒற்றளபெடை*
  5) *குற்றியலிகரம்*
  6) *குற்றியலுகரம்*
  7) *ஐகாரக்குறுக்கம்*
  8) *ஔகாரக்குறுக்கம்*
  9) *மகரக்குறுக்கம்*
  10) *ஆய்தக்குறுக்கம்*

### *1) உயிர்மெய்*

- *பதினெட்டு மெய்கள் மீதும் பன்னிரண்டு உயிர்களும் தனித்தனியே ஏறிவர (18×12 = 216) மொத்தம் 216 உயிர்மெய் எழுத்துகள் வரும்.*
- *உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் சேர்ந்த எழுத்து ஆதலால் உயிர்மெய் எழுத்து என பெயர் பெறும்.*
- *உயிர்மெய் எழுத்து எனப் பெயர் பெற்றாலும் மெய்எழுத்தை முதலிலும் உயிர் எழுத்தைப் பிறகும் (க்+அ=க) ஒலிக்க வேண்டும்.*
- *ஒலிவடிவம் மெய்யும் உயிரும் சேர்ந்ததாக இருக்கும்.*
- *உயிரும் மெய்யும் சேர்த்தது என்றாலும், உயிர்மெய் எழுத்தில் உள்ள உயிர் எழுத்தின் மாத்திரை அளவையே அவ் உயிர்மெய் எழுத்துப்பெற்று வரும்*
  - ✓ *க்+அ = க (1 மாத்திரை) , க்+ஆ = கா (2 மாத்திரை)*
- *உயிர் எழுத்தின் வடிவத்தைப் பெறாமல் மெய் எழுத்தின் வடிவத்தையே முதன்மையாகப் பெற்று வரும். (க்+அ = க)*
- *முதல் எழுத்துகளைச் சார்ந்து வருவதால் இவை சார்பெழுத்து எனப்படும்.*
- *உயிர் எழுத்தின் மாத்திரையைப் பெற்று வந்தாலும் மெய்யின் தன்மையைப் பெற்று வரும். அதாவது வல்லினம், இல்லினம் இடையினம் என உயிர் மெய்யும் வரும்.*

| | | |
|---|---|---|
| க,கா,கி,கீ போன்றன வல்லினம் | (6 × 12)=72 | 216 |
| ந,நா,நி,நீ போன்றன மெல்லினம் | (6 × 12)=72 | |
| ய,யா, யி போன்றன இடையினம் | (6 × 12 )= 72 | |


### *2) ஆய்தம்*

- ***மூன்று புள்ளிகளை** உடைய தனித்த வடிவம் பெற்றது.*
- ***முப்புள்ளி, முப்பாற்புள்ளி, தனிநிலை, அஃகேனம்** என்ற வேறு பெயர்களும் இதற்கு உண்டு.*
- ***நுட்பமான ஒலிப்புமுறையை** உடையது.*
- *தனக்குமுன் ஒரு குறில் எழுத்தையும் தனக்குப்பின் ஒரு வல்லின உயிர்மெய் எழுத்தையும் பெற்றுச் சொல்லின் இடையில் மட்டுமே வரும். எ.கா : அஃது*
- ***தனித்து இயங்காது.***
- *முதல் எழுத்துகளாகிய உயிரையும், மெய்யையும் சார்ந்து இயங்குவதால் ஆய்த எழுத்து சார்பெழுத்து ஆகும்*

## அளபெடை

- அளபெடுத்தல் - நீண்டு ஒலித்தல்.
- பேச்சு வழக்கில் சொற்களை நீட்டி ஒலித்துப் பேசுவோம். அவ்வாறு பேசும்போது உணர்வுக்கும் இனிய ஓசைக்கும் அளபெடுத்தல் பயன்படுகிறது.
  - ✓ எ. கா. : அம்மாஅ, தம்பீஇ

### அளபெடை இரு வகைப்படும்




### 3) உயிரளபெடை

- செய்யுளில் மொழிக்கு முதலிலும், இடையிலும், இறுதியிலும் நிற்கிற உயிர் நெட்டெழுத்துகள் தத்தம் அளவில் நீண்டு ஒலிக்கும் போது அதைக் குறிக்க நெட்டெழுத்துகளின் இனமான குற்றெழுத்துகள் அவற்றின் பின்னால் வரும். இவ்வாறு வருவது உயிரளபெடை எனப்படும்.
- உயிரளபெடை மூன்று மாத்திரை பெறும்
- உயிரளபெடை மூன்று வகைப்படும்
  1) செய்யுளிசை அளபெடை
  2) இன்னிசை அளபெடை
  3) சொல்லிசை அளபெடை

### செய்யுளிசை அளபெடை

- செய்யுளில் ஓசை குறையும் போது அதனை நிறைவு செய்ய , நெட்டெழுத்துகள் அளபெடுத்தலைச் செய்யுளிசை அளபெடை என்போம்.
- இதனை **இசை நிறை அளபெடை** என்றும் கூறுவர்.
- செய்யுளிசை அளபெடை பெரும்பாலும் ஈரசை சீராகவே வரும்.
  - ✓ ஓஒதல் வேண்டும் – மொழி முதல்
  - ✓ உறாஅர்க் குறுநோ ய் – மொழியிடை
  - ✓ நல்ல படாஅ பறை – மொழியிறுதி

### இன்னிசை அளபெடை

- செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக குறில் நெடிலாகி அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.
- இன்னிசை அளபெடையில் குறில் நெடிலாகி அளபெடுக்கும்

“கெடுப்ப**தூஉம்** கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்ப**தூஉம்** எல்லாம் மழை .”

- கெடுப்ப**தும்** ---- கெடுப்ப**தூம்** ------ கெடுப்பதூஉம்

### சொல்லிசை அளபெடை

- செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் ஒரு பெயர்ச்சொல் வினையெச்ச பொருள் தருமாறு அளபெடுப்பது **சொல்லிசை அளபெடை** ஆகும்.

உரனசை**இ** உள்ளம் துணையாக ச் சென்றார்
வரனசைஇ இன்னும் உளேன்.

- நசை – விருப்பம்; விரும்பி என்னும் பொருள் தருவதற்காக நசைஇ என அளபெடுத்தது. இவ்வாறு அளபெடுப்பது சொல்லிசை அளபெடை ஆகும்.

### 4) ஒற்றளபெடை

- செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவு செய்ய **மெய்யெழுத்துகளான ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆகிய பத்தும்**, ஃ என்னும் ஆய்த எழுத்தும் அளபெடுப்பது ஒற்றளபெடை ஆகும்.
- ஒற்றளபெடை மொழிக்கு முதலில் வராது .
- மொழிக்கு இடையிலும், இறுதியிலும் வரும் .

**எங்ங்** கிறைவன்
**எஃஃ** கிலங்கிய கையராய் இன்னுயிர்

### 5) குற்றியலுகரம்

- குழந்தை, வகுப்பு, பாக்கு ஆகிய சொற்களைச் சொல்லிப் பாருங்கள். மூன்று சொற்களிலும் 'கு' என்னும் எழுத்தை உச்சரிப்பதில் வேறுபாடு இருப்பதை உணரலாம்.
- அவ்வெழுத்து சொல்லின் முதலிலும், இடையிலும் வரும்பொழுது முழுமையாக ஒலிக்கிறது. சொல்லின் இறுதியில் வரும்பொழுது ஒருமாத்திரைக்குப் பதிலாக அரை மாத்திரை அளவே ஒலிக்கிறது.
- கு,சு,டு,து,பு,று ஆகிய ஆறு வல்லின உகரங்களும் சொல்லின் இறுதியில் வரும்போது, ஒரு மாத்திரைக்குப் பதிலாக அரை மாத்திரை அளவே ஒலிக்கும்.
- இவ்வாறு தனக்குரிய ஓசையில் குறைந்து ஒலிக்கும் உகரம் **குற்றியலுகரம்** ஆகும்.
  - ✓ குறுமை+இயல்+உகரம் = குற்றியலுகரம்.
  - ✓ (எ.கா.) கா**சு**,எஃ**கு**, பய**று**,பாட்**டு**, பந்**து**, சால்**பு**

### குற்றியலுகரத்தின் வகைகள்

- குற்றியலுகரம் தனக்கு முன் உள்ள எழுத்தைக் கொண்டு **ஆறு** வகையாகப் பிரிக்கப்படும்.

### 1. நெடில்தொடர்க் குற்றியலுகரம்

- தனி நெடிலைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் **'நெடில் தொடர்க் குற்றியலுகரம்'** எனப்படும். இவை ஈரெழுத்துச் சொற்களாக மட்டும் அமையும்.
  - ✓ ***(எ.கா.)*** பாகு, மாசு, பாடு, காது, ஆறு .

### 2. ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்

- ஆய்த எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் '**ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்'** எனப்படும்.
  - ✓ ***(எ.கா.)*** எஃகு, அஃது

### 3. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

- தனிநெடில் அல்லாத உயிர்மெய் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் **'உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்'** எனப்படும்.
  - ✓ ***(எ.கா.)*** அரசு (ர = ர் + அ)
  - ✓ ஒன்பது ( ப = ப் + அ)
  - ✓ கயிறு (யி = ய் + இ)
  - ✓ வரலாறு (லா = ல் + ஆ)

### 4. வன்தொடர்க் குற்றியலுகரம்

- வல்லின ***(க், ச், ட், த், ப், ற்)*** மெய் எழுத்துகளைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் **'வன்தொடர்க் குற்றியலுகரம்'** எனப்படும்.
  - ✓ ***(எ.கா.)*** பாக்கு, பேச்சு, பாட்டு, பத்து, உப்பு, பற்று

## 5. மென்தொடர்க் குற்றியலுகரம்

- மெல்லின **(ங், ஞ், ண், ந், ம், ன்)** மெய் எழுத்துகளைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் '**மென்தொடர்க் குற்றியலுகரம்'** எனப்படும்.
  - ✓ ***(எ.கா.)*** பங்கு, மஞ்சு, பண்பு, பந்து, அம்பு, கன்று

## 6. இடைத்தொடர்க் குற்றியலுகரம்

- இடையின ***(ய், ர், ல், வ், ழ், ள்)*** மெய் எழுத்துகளைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் **'இடைத்தொடர்க் குற்றியலுகரம்'** எனப்படும்.
- ***'வ்'*** என்னும் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரச் சொற்கள் இல்லை.
- மேலும் சு, டு,று ஆகியவை இறுதியாக அமையும் இடைத்தொடர் குற்றியலுகரச் சொற்களும் இல்லை.
  - ✓ ***(எ.கா.)*** எய்து, மார்பு, சால்பு, மூழ்கு

## முற்றியலுகரம்

- தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் வல்லின உகரங்கள் ஒரு மாத்திரை அளவுக்கு முழுமையாக ஒலிக்கும். வல்லினம் அல்லாத உகரங்கள் எப்போதும் முழுமையாகவே ஒலிக்கும்.
- இவ்வாறு ஓசை குறையாமல் ஒரு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிப்பதை முற்றியலுகரம் என்பர்.
  - ✓ (எ.கா.) புகு,பசு,விடு, அது, வறு, மாவு, ஏழு
- தமிழில் எழுத்துகளைக் குறிப்பிடுவதற்கு கரம், கான், காரம், கேனம் ஆகிய எழுத்துச் சாரியைகளைப் பயன்படுத்துகிறோம்.
- குறில் எழுத்துகளைக் குறிக்க **'கரம்'**
  - ✓ ***(எ.கா.)*** அகரம், இகரம், உகரம், ககரம், மகரம்
- நெடில் எழுத்துகளைக் குறிக்க **'கான்'**
  - ✓ ***(எ.கா.)*** ஐகான், ஔகான்
- குறில், நெடில் எழுத்துகளைக் குறிக்க **'காரம்'**
  - ✓ ***(எ.கா.)*** மகாரம், ஏகாரம் ஐகாரம் ஔகாரம்
- ஆய்த எழுத்தைக் குறிக்க **'கேனம்'**
  - ✓ ***(எ.கா.)*** அஃகேனம்

## 6) குற்றியலிகரம்

- வரகு+யாது - இந்த இரு சொற்களையும் சேர்த்து விரைவாக ஒலித்துப் பாருங்கள்.
- வரகியாது என ஒலிப்பதை அறியலாம். முதல் சொல்லின் இறுதியில் உள்ள 'கு' என்னும் எழுத்து 'கி' என்று ஒலிக்கிறது.
- அதுவும் முழுமையாக ஒரு மாத்திரை அளவில் ஒலிக்காமல் அரை மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கிறது.
- இவ்வாறு தன் ஒரு மாத்திரை அளவில் குறுகி ஒலிக்கும் இகரம் 'குற்றியலிகரம்' எனப்படும்.
  - ✓ குறுமை + இயல் + இகரம் = குற்றியலிகரம்.

**குற்றியலிகரம் இரண்டு இடங்களில் மட்டும் வரும்.**

***இடம் -1***


- குற்றியலுகரச் சொற்களைத் தொடர்ந்து யகரத்தை முதல் எழுத்தாகக் கொண்ட சொற்கள் வரும்போது குற்றியலுகரத்தில் உள்ள உகரம் இகரமாக மாறும். அந்த இகரம் தனக்குரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து அரை மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும்.
  - ✓ (எ.கா.) கொக்**கு** + யாது = கொக்**கி**யாது (க் + உ) (க்+இ)
  - ✓ நா**டு** + யாது = நா**டி**யாது (ட் + உ) (ட் + இ)
  - ✓ தோப்**பு** + யாது = தோப்**பி**யாது (ப் + உ) (ப்+இ)
  - ✓ எனப்படுவ**து**+யாது = எனப்படுவ**தி**யாது (த் + உ) (த்+இ)

**இடம் - 2**

- 'மியா' என்பது ஓர் அசைச்சொல் (ஓசை நயத்திற்காக வருவது). இதில் 'மி' யில் (மி = ம் +இ) உள்ள இகரம் குற்றியலிகரம் ஆகும். இது சொற்களில் இடம்பெறும் போது தனக்குரிய மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும்.
  - ✓ (எ.கா.) கேள் + மியா = கேண்மியா
  - ✓ செல் + மியா = சென்மியா
  - குற்றியலிகரம் தற்போது உரைநடை வழக்கில் இல்லை. இலக்கியங்களில் மட்டுமே உள்ளது


### 7. ஐகாரக்குறுக்கம்

- ஐ, கை, பை என ஐகார எழுத்து, தனித்து வரும் இடங்களில் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கிறது.
- வையம், சமையல், பறவை என சொற்களின் முதல், இடை, இறுதி ஆகிய இடங்களில் வரும்போது தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கிறது.
- இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஐகாரம் ஐகாரக்குறுக்கம் எனப்படும்
- ஐகாரம் சொல்லின் முதலில் வரும்போது ஒன்றரை மாத்திரை அளவில் ஒலிக்கும்.
- ஐகாரம் சொல்லின் இடையிலும் இறுதியிலும் வரும்போது ஒரு மாத்திரை அளவில் ஒலிக்கும்.




### 8. ஔகாரக்குறுக்கம்

- ஔ, வௌ என ஔகார எழுத்து, தனித்து வரும் இடங்களில் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கிறது.
- ஔவையார், வௌவால் எனச் சொற்களின் முதலில் வரும்போது தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒன்றரை மாத்திரை அளவில் ஒலிக்கிறது.
- இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஔகாரம் ஔகாரக்குறுக்கம் எனப்படும்.



## 9. மகரக்குறுக்கம்

- அம்மா, பாடம் படித்தான் ஆகிய சொற்களில் மகர மெய்யெழுத்து தனக்குரிய அரை மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கிறது.
- வலம் வந்தான் என்பதில் **மகர மெய்யெழுத்தை** அடுத்து **வகர** எழுத்து வருவதால் மகரமெய்யானது தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கிறது.
- **போலும்** என்னும் சொல்லைப் **போன்ம்** என்றும், **மருளும்** என்னும் சொல்லை **மருண்ம்** என்றும் செய்யுளில் ஓசைச் சீர்மைக்காகப் பயன்படுத்தினர்.
- இச்சொற்களில் மகரமெய்யானது ன், ண் ஆகிய எழுத்துகளை அடுத்து வருவதால் தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கிறது.
- இவ்வாறு குறைந்து ஒலிக்கும் மகரம் **மகரக்குறுக்கம்** எனப்படும்.

## 10. ஆய்தக்குறுக்கம்

- அஃது, எஃகு ஆகிய சொற்களில் ஆய்த எழுத்து, தனக்குரிய அரை மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கிறது.
- நிலைமொழியில் தனிக்குறிலை அடுத்துவரும் **லகர , ளகர** மெய்எழுத்துக்கள் , வருமொழியில் உள்ள தகரத்தோடு சேரும்போது ஆயுதமாக திரியும்.
  - ✓ முள் + தீது = **முஃடீது**
- இச்சொற்களில் உள்ள ஆய்த எழுத்து, தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கிறது.
- இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஆய்தம் **ஆய்தக்குறுக்கம்** எனப்படும்.

# 2. எழுத்துகளின் பிறப்பு

## எழுத்துகளின் பிறப்பு

- எழுத்துகளின் பிறப்பினை இடப்பிறப்பு , முயற்சிப் பிறப்பு என இரண்டு வகையாகப் பிரிப்பர்.
- உயிரின் முயற்சியால் உடலின் உள்ளிருந்து எழும் காற்றானது மார்பு, தலை, கழுத்து, மூக்கு ஆகிய நான்கு இடங்களுள் ஒன்றில் பொருந்தி, இதழ், நாக்கு, பல், மேல்வாய் ஆகிய உறுப்புகளின் முயற்சியினால் வேறுவேறு ஒலிகளாகத் தோன்றுகின்றன.
- இதனையே எழுத்துகளின் பிறப்பு என்பர்.

## எழுத்துகளின் இடப்பிறப்பு

- உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- வல்லின மெய் எழுத்துகள் ஆறும் மார்பை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- மெல்லின மெய் எழுத்துகள் ஆறும் மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- இடையின மெய் எழுத்துகள் ஆறும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- ஆய்த எழுத்து தலையை இடமாகக் கொண்டு பிறக்கிறது.

  **ஆவி இடைமை** இடம்மிடறு ஆகும்
  மேவும் **மென்மை** மூக்கு உரம்பெறும் **வன்மை**.

  *- **நன்னூல்** - 75*

## எழுத்துகளின் முயற்சிப் பிறப்பு

## உயிர் எழுத்துகள்

- **அ, ஆ** ஆகிய இரண்டும் வாய் திறத்தலாகிய முயற்சியால் பிறக்கின்றன.

  முயற்சியுள்ள **அ ஆ** அங்காப் புடைய.

  *- நன்னூல் - 76.*

- **இ, ஈ, எ, ஏ, ஐ** ஆகிய ஐந்தும் வாய்திறக்கும் முயற்சியுடன் நாக்கின் அடி ஓரமானது மேல்வாய்ப் பல்லைப் பொருந்தும் முயற்சியால் பிறக்கின்றன.

  **இ ஈ எ ஏ ஐ** அங் காப்போடு
  அண்பல் முதல்நா விளிம்புற வருமே.

  ***-நன்னூல் - 76.***

- **உ, ஊ, ஒ, ஓ, ஔ** ஆகிய ஐந்தும் வாய் திறக்கும் முயற்சியுடன் இதழ்களைக் குவிப்பதால் பிறக்கின்றன.

  **உ ஊ ஒ ஓ ஔ** இதழ் குவிவே.

  ***-நன்னூல் - 78.***

## மெய் எழுத்துகள்

- **க், ங்** - ஆகிய இருமெய்களும் நாவின் முதற்பகுதி, அண்ணத்தின் அடிப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.
- **ச், ஞ்** - ஆகிய இருமெய்களும் நாவின் இடைப்பகுதி, நடுஅண்ணத்தின் இடைப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.
- **ட், ண்** - ஆகிய இருமெய்களும் நாவின் நுனி, அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.

  **கஙவும் சஞவும் டணவும்** முதல் இடை
  நுனிநா அண்ணம் உரவுமுறை வருமே.

  ***- நன்னூல் - 79.***

- **த், ந்** - ஆகிய இருமெய்களும் மேல்வாய்ப்பல்லின் அடியை நாக்கின் நுனி பொருந்துவதால் பிறக்கின்றன.

  அண்பல் அடிநா முடியுறத் **த ந** வரும்.

  ***-நன்னூல் - 80***

- **ப், ம்** - ஆகிய இருமெய்களும் மேல் இதழும் கீழ் இதழும் பொருந்துவதால் பிறக்கின்றன.

  மீகீழ் இதழ்உறப் **பம்ம**ப் பிறக்கும்.

  ***- நன்னூல் - 81.***

- ***ய்*** – இது நாக்கின் அடிப்பகுதி, மேல் வாயின் அடிப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கிறது.
  *அடிநா அடிஅண்ணம் உற **யத்** தோன்றும்.*

**-நன்னூல் - 82.**

- ***ர், ழ்*** - ஆகிய இருமெய்களும் மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால் பிறக்கின்றன
  *அண்ண நுனிநா வருட ரழ வரும்.*

**- நன்னூல் - 83.**

- ***ல்*** – இது மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் ஓரங்கள் தடித்து நெருங்குவதால் பிறக்கிறது.
- ***ள்*** – இது மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுதலால் பிறக்கிறது.
  *அண்பல் முதலும் அண்ணமும் முறையின்*
  *நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்*
  ***ல**கார **ள**காரமாய் இரண்டும் பிறக்கும்.*

**-நன்னூல் - 84.**

- ***வ்*** – இது மேல்வாய்ப்பல்லைக் கீழ் உதடு பொருந்துவதால் பிறக்கிறது.
  *மேற்பல் இதழ் உற மேவிடும் **வ**வ்வே.*

**-நன்னூல் - 85**

- ***ற், ன்*** - ஆகிய இருமெய்களும் மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதால் பிறக்கின்றன.
  *அண்ணம் நுனிநா நனியுறில் **றன** வரும்.*

**-நன்னூல் - 86**

## சார்பெழுத்துகள்

- ஆய்த எழுத்து வாயைத்திறந்து ஒலிக்கும் முயற்சியால் பிறக்கிறது.
- பிற சார்பெழுத்துகள் யாவும் தத்தம் முதலெழுத்துகள் தோன்றும் இடங்களிலேயே அவை பிறப்பதற்கு உரிய முயற்சிகளைக் கொண்டு தாமும் பிறக்கின்றன.

# 3. புணர்ச்சி

- புணர்ச்சி என்பது இரண்டு சொற்களுக்கு இடையில் நிகழ்வது.
- ஒரு சொல்லோடு ஒட்டுகளோ , இன்னொரு சொல்லோ இணையலாம். அவ்வாறு இணையும்போது ஒலி நிலையில் மாற்றங்கள் நிகழ்வதுண்டு; மாற்றம் இல்லாமலும் சேர்வதுண்டு.
- முதலில் உள்ள சொல்லை நிலைமொழி என்றும் அதனுடன் வந்து சேரும் சொல்லை வருமொழி என்றும் கூறுவர்.
- இவ்விரு சொற்களும் சேரும்போது நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் இணைகின்றன.
- இவ்வாறு நிலைமொழி ஈறும், வருமொழி முதலும் இணைவதைப் புணர்ச்சி என்கிறோம்.

## புணர்மொழியின் இயல்பு

- எழுத்து வகையால் சொற்கள் நான்கு வகைப்படும்.

| | |
|---|---|
| கலை + அழகு | உயிரீறு |
| மண் + குடம் | மெய்யீறு |
| வாழை + இலை | உயிர்முதல் |
| வாழை + மரம் | மெய்ம்முதல் |

- புணர்ச்சியை நிலைமொழி இறுதி எழுத்து, வருமொழி முதல் எழுத்து அடிப்படையில் நான்காகப் பிரிக்கலாம்.

| | |
|---|---|
| உயிர் முன் உயிர் | மணி (ண்+இ) + அடி = மணியடி |
| உயிர் முன் மெய் | பனி + காற்று = பனிக்காற்று |
| மெய் முன் உயிர் | ஆல் + இலை = ஆலிலை |
| மெய் முன் மெய் | மரம் + (க்+இ) கிளை = மரக்கிளை |

## இயல்பு புணர்ச்சி

- நிலைமொழியும் வருமொழியும் எவ்வித மாற்றமும் இன்றி இணைவது **இயல்பு புணர்ச்சி** ஆகும்.
  - ✓ ***(எ.கா.)*** தாய் + மொழி = தாய்மொழி (இரு சொற்களிலும் எம்மாற்றமும் நிகழவில்லை.)

## விகாரப் புணர்ச்சியும்

- உடல் + ஓம்பல் = உடலோம்பல் (இங்கு ல் + ஓ இணைந்து லோ என்னும் உயிர்மெய் எழுத்து ஆயிற்று. புதிய எழுத்து எதுவும் தோன்றவோ வேறு எழுத்தாகத் திரியவோ மறையவோ இல்லை.)
- இரண்டு சொற்கள் இணையும்போது நிலைமொழியிலோ வருமொழியிலோ அல்லது இரண்டிலுமோ மாற்றங்கள் நிகழுமாயின், அது விகாரப் புணர்ச்சி எனப்படும். விகாரப் புணர்ச்சி **தோன்றல், திரிதல், கெடுதல்** என மூவகைப்படும்.
- நிலைமொழியும் வருமொழியும் இணையும்போது புதிதாக ஓர் எழுத்துத் தோன்றுவது தோன்றல் விகாரம் ஆகும்.
  - ✓ ***(எ.கா.)*** தமிழ் + தாய் = தமிழ்த்தாய்
- நிலைமொழியும் வருமொழியும் இணையும்போது ஓர் எழுத்து வேறு எழுத்தாக மாறுவது திரிதல் விகாரம் ஆகும்.
  - ✓ ***(எ,கா.)*** வில் + கொடி = விற்கொடி
- நிலைமொழியும் வருமொழியும் இணையும்போது ஓர் எழுத்து மறைவது கெடுதல் விகாரம் ஆகும்.
  - ✓ ***(எ.கா.)*** மனம் + மகிழ்ச்சி = மனமகிழ்ச்சி
- இரண்டு சொற்கள் இணையும்போது ஒன்றுக்கு மேற்பட்ட விகாரங்கள் நிகழ்வதும் உண்டு.
  - ✓ ***(எ.கா.)*** நாடகம் + கலை = நாடகக்கலை
- இங்குக் கெடுதல் விகாரத்தின்படி நிலைமொழி ஈற்றில் உள்ள மகர மெய் மறைந்தது, தோன்றல் விகாரத்தின்படி க் என்னும் மெய்யெழுத்து தோன்றியது.

## உடம்படுமெய்

- உயிரை ஈறாக உடைய சொற்களின்முன் உயிரை முதலாக உடைய சொற்கள் வந்து சேரும்; அப்போது சொற்கள் சேராமல் தனித்து நிற்கும்; ஒன்று சேராத உயிரொலிகளை ஒன்று சேர்ப்பதற்கு அங்கு ஒரு மெய் தோன்றும். இதனை **உடம்படுமெய்** என்று சொல்வர்.
- நிலைமொழியின் ஈற்றில் **'இ,ஈ,ஐ'** என்னும் உயிரெழுத்துகளை ஈறாக உடைய சொற்கள் நிற்கும். அவற்றின்முன், பன்னிரண்டு உயிர்களையும் முதலாவதாக உடைய சொற்கள் சேரும். அந்நிலையில் யகரம் உடம்படுமெய்யாக வரும்.
  - ✓ மணி + அழகு = மணி + ய் + அழகு = மணியழகு
  - ✓ தீ + எரி = தீ + ய் + எரி = தீயெரி
  - ✓ ஓடை + ஓரம் = ஓடை + ய் + ஓரம் = ஓடையோரம்
- *'இ, ஈ, ஐ' தவிர, பிற உயிரெழுத்துகள் நிலை மொழி ஈறாக வரும்போது அவற்றின்முன் வருமொழியில் பன்னிரண்டு உயிர்களும் வந்து புணர்கையில் **வகர மெய்** தோன்றும்.
  - ✓ பல + உயிர் = பல + வ் + உயிர் = பலவுயிர்
  - ✓ பா + இனம் = பா + வ் + இனம் = பாவினம்,
  - ✓ பலா + அருமை = பலாவருமை
- நிலை மொழி ஈறாக ஏகாரம் வந்து, வருமொழியில் பன்னிரண்டு உயிரெழுத்துகளையும் உடைய சொற்கள் வந்து புணர்கையில் **யகரமோ வகரமோ** தோன்றும்.
  - ✓ சே + அடி = சே + ய் + அடி = சேயடி;
  - ✓ சே + வ் + அடி = சேவடி
  - ✓ தே + ஆரம் = தே + வ் + ஆரம் = தேவாரம்
  - ✓ இவனே + அவன் = இவனே +ய் + அவன் = இவனேயவன்

| |
|---|
| **இ ஈ ஐ** வழி யவ்வும் ஏனை<br>உயிர்வழி வவ்வும் ஏமுனிவ் விருமையும்<br>உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்.<br>- ***(நன்.162)*** |

## குற்றியலுகரப் புணர்ச்சி

- ✓ வட்டு + ஆடினான் = வட் ( ட் + உ ) + ஆடினான் = வட்ட் + ஆடினான் = வட்டாடினான்
- நிலைமொழியாக வரும் குற்றியலுகரத்தின் முன் உயிரெழுத்துகள் வந்தால், நிலைமொழியிலுள்ள உகரம் கெடும்.
- வருமொழியிலுள்ள உயிரெழுத்து நின்ற மெய்யுடன் இணையும். குற்றியலுகரத்தைப் போலவே சில முற்றியலுகரங்களுக்கும் இவ்விரு விதிகளும் பொருந்தும்.
  - ✓ உறவு + அழகு = உற(வ் +உ) = உறவ் + அழகு = உறவழகு

## மெய்ம்மயக்கம்

- *புணர்ச்சியில் இரு சொற்கள் இணையும்போது வருமொழியில் க, ச, த, ப வந்தால் சில இடங்களில் மீண்டும் அதே எழுத்துத் தோன்றும். இதை வலி மிகுதல்' என்பர்.
  - ✓ ***(எ.கா)*** கலைக் கழகம் – என்பது கலையைக் கற்பிக்கும் கழகம் ஆகும்.
  - ✓ அஃதாவது இரண்டு சொற்களுக்கு இடையே 'க்' என்ற ஒற்று மிகுவதால் கலையைக் கற்பிக்கும் கழகம் என்று பொருள் கொள்ள வேண்டும்.
- இது போன்றே சில இடங்களில் மெல்லினமும் மிகுதல் உண்டு. குறிப்பாக, ங, ஞ, ந, ம என்ற நான்கு எழுத்துகளும் இவ்வாறு மிகும்.

1. 'ய'கர ஈற்றுச் சொற்கள் முன் மெல்லினம் மிகும்.
   - ✓ **எ.கா.** மெய்+மயக்கம்=மெய்ம்மயக்கம்,
   - ✓ மெய்+ஞானம்= மெய்ஞ்ஞானம், செய்+நன்றி=செய்ந்நன்றி
2. வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தில் யரழ முன்னர் மெல்லினம் மிகும்.
   - ✓ **எ.கா.** வேய்+குழல்=வேய்ங்குழல், கூர்+சிறை=கூர்ஞ்சிறை, பாழ்+கிணறு பாழ்ங்கிணறு

3. 'புளி' என்னும் சுவைப் பெயர் முன்னர் வல்லெழுத்து மட்டுமன்றி மெல்லினமும் மிகும்.
   ✓ **எ.கா.** புளி+கறி=புளிங்கறி, புளி+சோறு=புளிஞ்சோறு
4. உயிரெழுத்தை இறுதியில் கொண்ட மரப் பெயர்களுக்கு முன்னர் மெல்லினம் மிகும்.
   ✓ **எ.கா.** மா+பழம் மாம்பழம், விள+காய்=விளங்காய்

## 4. மொழி முதல், இறுதி எழுத்துகள்

### மொழி முதல் எழுத்துகள்

- மொழி என்பதற்குச் சொல் என்னும் பொருளும் உண்டு. சொல்லின் முதலில் வரும் எழுத்துகளை மொழிமுதல் எழுத்துகள் என்பர்.
- ங, ஞ, ய, வ ஆகிய உயிர்மெய் எழுத்து வரிசைகளில் சில எழுத்துகள் மட்டுமே சொல்லின் முதலில் வரும்.
- இக்காலத்தில் ஙனம் என்னும் சொல் தனித்து இயங்காமல் அங்ஙனம், இங்ஙனம், எங்ஙனம் என்னும் சொற்களில் மட்டுமே வழங்கி வருகிறது.

| வரிசை எண் | எழுத்துகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உயிர்எழுத்துகள் | 12 |
| 2. | உயிர்மெய்எழுத்துகள் - க, ச, த, ந, ப, ம வரிசைகள் (அனைத்தும்) | 72 |
| 3. | ங - வரிசை (ங என்னும் ஓர் எழுத்து மட்டும்) | 1 |
| 4. | ஞ - வரிசை (ஞ, ஞா, ஞெ, ஞொ) | 4 |
| 5. | ய - வரிசை (ய, யா, யு, யூ, யோ, யௌ) | 6 |
| 6. | வ - வரிசை (வ, வா, வி, வீ, வெ, வே, வை , வௌ) | 8 |

- **(எ.கா.)** க - வரிசை எழுத்துகள் - கடல், காக்கை, கிழக்கு, கீற்று, குருவி, கூந்தல், கெண்டை, கேணி, கைகள், கொக்கு, கோலம், கௌதாரி.

### மொழிக்கு முதலில் வராத எழுத்துகள்

| வரிசை எண் | எழுத்துகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மெய் எழுத்துகள் | 18 |
| 2. | உயிர்மெய் எழுத்துகள் - ட, ண, ர, ல, ழ, ள, ற, ன - வரிசைகள் (அனைத்தும்) | 96 |
| 3. | ங - வரிசை (ங என்னும் ஓர் எழுத்தைத் தவிர ஏனைய எழுத்துகள்) | 11 |
| 4. | ஞ - வரிசை (ஞி, ஞீ, ஞு, ஞூ, ஞே, ஞை, ஞோ, ஞௌ) | 8 |
| 5. | ய - வரிசை (யி, யீ, யெ, யே, யை, யொ) | 6 |
| 6. | வ - வரிசை (வு, வூ, வொ, வோ,வௌ) | 5 |
| **7.** | ஆய்த எழுத்து (ஃ) | 1 |

- டமாரம், ரம்பம், லண்டன். ஃப்ரான்ஸ், டென்மார்க், போன்றவை பிறமொழிச் சொற்கள். இவற்றைத் தமிழில் ஒலி பெயர்த்து எழுதுகிறோம்.

### மொழி இறுதி எழுத்துகள்

- சொல்லின் இறுதியில் வரும் எழுத்துகளை மொழி இறுதி எழுத்துகள் என்பர்.
- உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் மெய்யுடன் இணைந்து உயிர்மெய்யாக மட்டுமே மொழி இறுதியில் வரும்.
- **ஞ், ண், ந், ம், ய், ர், ல், வ், ழ், ள், ன்** ஆகிய மெய்யெழுத்துகள் பதினொன்றும் மொழியின் இறுதியில் வரும். (உரிஞ், வெரிந், அவ்)

## மொழி இறுதியாகா எழுத்துகள்

- சொல்லின் இறுதியில் உயிரெழுத்துகள் தனித்து வருவதில்லை.
- **ஆய்த எழுத்து** சொல்லின் இறுதியில் வராது.
- **க், ங், ச், ட், த், ப், ற்** ஆகிய ஏழு மெய் எழுத்துகளும் சொல்லின் இறுதியில் வருவதில்லை.
- உயிர்மெய் எழுத்துக்களுள் **'ங'** எழுத்து வரிசை சொல்லின் இறுதியில் வராது.
- எகர வரிசையில் கெ முதல் னெ முடிய எந்த உயிர்மெய் எழுத்தும் மொழி இறுதியில் வருவதில்லை.
- ஒகர வரிசையில் நொ தவிர பிற உயிர்மெய் எழுத்துகள் மொழி இறுதியில் வருவதில்லை.
  - ✓ **நொ** – துன்பம்
- உயிர் எழுத்துகள் மெய்யெழுத்துடன் இணைந்து உயிர்மெய்யாக மட்டுமே சொல்லின் இறுதியில் வரும்.
- அளபெடை எழுத்துகளில் இடம் பெறும் போது உயிர் எழுத்துகள் சொல்லின் இறுதியில் வரும்.
- கார்த்திக், ஹாங்காங், சுஜித், மார்க்கெட், திலீப், மார்ச் போன்ற பிறமொழிப் பெயர்ச்சொற்களில் இவ்வெழுத்துகள் இறுதி எழுத்துகளாக இடம்பெறுவதுண்டு.

## சொல்லின் இடையில் வரும் எழுத்துகள்

- மெய் எழுத்துகள் பதினெட்டும் சொல்லின் இடையில் வரும்.
- உயிர்மெய் எழுத்துகள் சொல்லின் இடையில் வரும்.
- ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்.
- அளபெடையில் மட்டுமே உயிர் எழுத்துகள் சொல்லின் இடையில் வரும்.

VIJAYAKUMAR IAS ACADEMY INSTITUTE FOR YOUR SUCCESS

## 5. ஆகுபெயர்

- ஒன்றன் பெயர் அதனைக் குறிக்காமல் அதனோடு தொடர்புடைய வேறு ஒன்றிற்கு ஆகி வருவது ஆகுபெயர் எனப்படும்.
- பொருள் இடம், காலம், சினை, பண்பு, தொழில் ஆசிய ஆறு வகையான பெயர்ச்சொற்களிலும் ஆகுபெயர்கள் உண்டு.
- தொல்காப்பியர் ஆகுபெயர்களை ஏழாகவும். நன்னூலார் பதினைந்தாகவும் வகைப்படுத்தி வகுத்துள்ளனர்.
  - ✓ தோட்டத்தில் மேயுது **வெள்ளைப்**பசு.
- இத்தொடரில் வெள்ளை என்னும் சொல் வெண்மை என்னும் நிறப் பொருளைத் தருகிறது. இஃது இயல்பான பெயர்ச்சொல் ஆகும்.
  - ✓ வீட்டுக்கு **வெள்ளை** அடித்தான்.
- இத்தொடரில் வெள்ளை என்பது வெண்மை நிறத்தைக் குறிக்காமல் வெண்மை நிறமுடைய சுண்ணாம்பைக் குறிக்கிறது.
- இவ்வாறு ஒன்றன் பெயர் அதனைக் குறிக்காமல் அதனோடு தொடர்புடைய வேறு ஒன்றிற்கு ஆகி வருவது **ஆகுபெயர்** எனப்படும்.

### ஆகுபெயர் பதினாறு வகைப்படும்.

1) முதலாகு பெயர்
2) இடவாகுபெயர்
3) காலவாகுபெயர்
4) சினையாக பெயர்
5) குணவாகு பெயர்
6) தொழிலாகு பெயர்
7) சொல்லாகுபெயர்
8) தானியாகு பெயர்
9) கருவியாகு பெயர்
10) காரியவாகு பெயர்
11) கருத்தாகு பெயர்
12) உவமையாகு பெயர்
13) எண்ணல் அளவை ஆகுபெயர்
14) எடுத்தல் அளவை ஆகுபெயர்
15) முகத்தல் அளவை ஆகுபெயர்
16) நீட்டல் அளவை ஆகுபெயர்

### 1) பொருளாகு பெயர்

- ஒரு முழுப்பொருளின் பெயர் தன்னைச் சுட்டாது அதன் உறுப்புக்கு ஆகி வருவது பொருளாகுபெயர் எனப்படும். இதனை முதலாகுபெயர் எனவும் கூறுவர்.
  - ✓ ***(எ. கா)*** செல்வி மல்லிகை சூடினாள்
- இத்தொடரில் உள்ள மல்லிகை என்னும் சொல் வேர், கொடி. இலை, பூ ஆகிய உறுப்புகள் அனைத்தும் சேர்ந்த முழுப்பொருளைக் குறிக்கிறது, ஆனால் அடுத்துள்ள சூடினாள் என்னும் பயனிலையால் மல்லிகை என்னும் பெயர், முழுப்பொருளை உணர்த்தாது, அதன் ஓர் உறுப்பாகிய மலரை மட்டும் உணர்த்துகிறது.
- எனவே இது பொருளாகு பெயர்.

### 2) இடவாகு பெயர்

- ஓர் இடத்தின் பெயர் அந்த இடத்தோடு தொடர்புடைய வேறு பொருளுக்கு ஆகி வருவது 'இடவாகு பெயர் எனப்படும்.
  - ✓ ***(எ. கா)*** கிரிக்கெட்டில் இந்தியா வென்றது.
- இந்தச் சொற்றொடரில் உள்ள இந்தியா என்னும் இடப்பெயர் அப்பெயரால் அமைந்த நாட்டைக் குறிக்காது. அந்நாட்டிற்காக விளையாடிய வீரர்களைக் குறிக்கிறது.
- எனவே இது இடவாகு பெயர் ஆகும்.

### 3) காலவாகு பெயர்

  - ✓ ***(எ. கா.)*** திசம்பர் பூ சூடினாள்
- திசம்பர் என்னும் மாதப்பெயர், அம்மாதத்தில் பூக்கும் பூவிற்கு ஆகி வந்தது. அதனால், இது காலவாகுபெயர்.

### 4) சினையாகு பெயர்

- ஒரு சினையின் (உறுப்பு) பெயர், அதனோடு தொடர்புடைய முழுப்பொருளுக்கு ஆகி வருவது சினையாகுபெயர் எனப்படும்.
  - ✓ ***(எ.கா.)*** *ஆசிரியர் தலைக்கு ஒரு வினாத்தாள் தந்தார்.*
- 'தலை' என்பது நம்முடலின் ஓர் உறுப்பு இத்தொடரில் உள்ள 'தலை' என்னும் உறுப்பின் பெயர். ஆனால் அடுத்துள்ள குறிப்புச் சொற்களால் மாணவனைக் குறிக்கின்றது.
- எனவே இது சினையாகுபெயர் எனப்படும்.

### 5) குணவாகு பெயர் (பண்பாகுபெயர்)

  - ✓ ***(எ.கா.)*** *வெள்ளை அடிப்போம்*
- வெள்ளை என்பது நிறப்பண்பு. ஆனால், அது நிறத்தைக் குறிக்காமல், சுண்ணாம்பைக் குறித்து வந்தது. அதனால், இது பண்பாகு பெயர்.

### 6) தொழிலாகு பெயர்

  - ✓ ***(எ.கா.)*** *பொங்கல் உண்போம்*
- இங்குப் பொங்கல் என்பது பொங்குதலாகிய தொழிற்பெயர். இத்தொழிற் பெயர் தொழிலைக் குறிக்காமல், அத்தொழிலால் ஆகும் உணவைக் குறித்தது.
- அதனால், இது தொழிலாகு பெயர்.

### 7) சொல்லாகு பெயர்

  - ✓ ***(எ.கா.)*** *வள்ளுவர்சொல் வாழ்க்கைக்கு இனிது.*
- இத்தொடரில் வள்ளுவர்சொல் என்பது, சொல்லைக் குறிக்காது பொருளுக்குப் பெயராகி வந்ததனால்,
- இது சொல்லாகு பெயர்.

### 8) தானியாகு பெயர்

  - ✓ ***(எ. கா)*** *பாலை இறக்கு,*
- பாலின் பெயர், பாலைக் குறிக்காமல் பாத்திரத்தைக் குறிக்கிறது. ஓர் இடத்தில் உள்ள ஒரு பொருளின் பெயர் (தானி).
- அது சார்ந்திருக்கும் இடத்திற்குப் (தானத்திற்கு) பெயராகி வருவது தானியாகு பெயர்.
  - ✓ இடம், பொருளுக்கு ஆகி வருவது இடவாகுபெயர்.
  - ✓ பொருள். இடத்திற்கு ஆகி வருவது தானியாகு பெயர்.

### 9) கருவியாகு பெயர்

- ஒரு கருவியின் பெயர், அதனால் உண்டாகிய காரியப் பொருளுக்கு ஆகி வருவது கருவியாகுபெயர் எனப்படும்.
  - ✓ *(எ. கா) குழல்கேட்டு மகிழ்ந்தான்.*
- குழல் என்னும் இசைக் கருவியின் பெயர், அதனால் உண்டான இசைக்கு ஆகிவந்து குழலோசை கேட்டு மகிழ்ந்தான் என்றானதால், இது கருவியாகுபெயர் ஆயிற்று.

### 10) காரியவாகு பெயர்

  - ✓ ***(எ. கா)*** *நான் சமையல் கற்றேன், பைங்கூழ் வளர்ந்தது.*
- இங்குச் சமையல் என்னும் காரியத்தின் பெயர் அதன் காரணத்திற்கு (கருவிக்கு பெயராகி வருவது) ஆகி வருவது காரியவாகு பெயர்.

### 11) கருத்தாகு பெயர்

  - ✓ *(எ. கா) திருவள்ளுவரைப் படித்துப்பார்.'*
- இத்தொடரில் திருவள்ளுவர் என்பது, அவரால் இயற்றப் பெற்ற நூலுக்கு ஆகிவந்ததனால், கருத்தாவாகு பெயராயிற்று.

### *12) உவமையாகு பெயர்*

- *உவமானப் பெயர், தொடர்புடைய உவமேயப் பொருளுக்கு ஆகி வருவது உவமையாகுபெயர் எனப்படும்.*
  - ✓ ***(எ. கா)** காளை வந்தான்*
- *காளை மாட்டைக் குறிக்கும் பெயராகிய காளை என்பது காளை மாடு போன்ற வலிமையும் வீரமும் வாய்ந்த ஆண் மகனுக்கு ஆகி வந்தது. காளை போன்றவன் வந்தான். எனவே இது உவமையாகுபெயர் ஆயிற்று*

### *13) எண்ணல் அளவை ஆகுபெயர்*

- *எண்ணைக் குறிக்கும் பெயர். தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது எண்ணல் அளவை ஆகுபெயர் எனப்படும்.*
  - ✓ ***(எ. கா)** நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி*
- *இத்தொடரில் உள்ள நான்கு, இரண்டு என்னும் சொற்கள் எண்ணிக்கைப் பொருளை உணர்த்தாது. நான்கு அடிகளாலான நாலடியாரையும், இரண்டடிகளாலான திருக்குறளையும் குறிக்கின்றன. இவ்வாறு எண்ணலளவைப் பெயர் தொடர்புடைய நூல்களுக்கு ஆகிவருவதால் இஃது எண்ணலளவையாகுபெயர் எனப்படும்.*

### *14) எடுத்தல் அளவை ஆகுபெயர்*

- ✓ ***(எ. கா)** ஐந்து கிலோ என்ன விலை?*
- *இத்தொடரில் கிலோ என்னும் எடுத்தல் அளவைப் பெயர், அவ்வளவைக் குறிக்காமல், அவ்வளவுடைய பொருளுக்கு (அரிசி, பருப்பு...) ஆகிவந்தது. எனவே, இஃது எடுத்தல் அளவை ஆகுபெயர்.*

### *15) முகத்தல் அளவை ஆகுபெயர்*

- ✓ ***(எ. கா)** நாலு லிட்டர் தேவை.*
- *இத்தொடரில் லிட்டர் என்னும் முகத்தல் அளவைப்பெயர், அவ்வளவைக் குறிக்கவில்லை. அவ்வளவுடைய நெய், பால் முதலியவற்றில் எண்ணெய், பால் ஒன்றுக்கு ஆகிவந்தது. எனவே, இது முகத்தல் அளவை ஆகுபெயர்.*

### *16) நீட்டல் அளவை ஆகுபெயர்*

- ✓ ***(எ. கா)** மூன்று மீட்டர் கொடு.*
- *இத்தொடரில், மூன்று மீட்டர் என்பது அவ்வளவுடைய அளவுகோலைக் குறிக்காது, அதனால் நீட்டி அளக்கப்பெறும் துணிக்கு ஆகி வந்தது. எனவே, இது நீட்டல் அளவை ஆகுபெயர்.*

# *II. சொல் இலக்கணம்*

## *6. மூவகை மொழி*

- ஓர் எழுத்து தனித்தோ, பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் தரும் வகையில் அமைவது சொல் ஆகும். அது,
    1) இரு திணைகளையும், ஐந்து பால்களையும் குறிக்கும்.
    2) மூவகை இடங்களிலும் வரும்.
    3) உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வரும்.
    4) வெளிப்படையாகவும் குறிப்பாகவும் விளங்கும்.

### மூவகை மொழி

- தனி மொழி, தொடர்மொழி, பொதுமொழி என மொழி மூன்று வகையாக அமையும்.

  ஒருமொழி ஒருபொரு ளனவாம் தொடர்மொழி
  லபொரு ளனபொது இருமையும் ஏற்பன.

  **- (நன்னூல் – 260)**

## தனிமொழி

- ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருமாயின் **அது தனிமொழி** எனப்படும்.

  **எ. கா.**
    - ✓ கண், படி - பகாப்பதம்
    - ✓ கண்ணன், படித்தான் - பகுபதம்

### தொடர்மொழி

- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது தொடர்மொழி ஆகும்.

  **எ. கா.**
    - ✓ கண்ணன் வந்தான்.
    - ✓ மலர் வீட்டுக்குச் சென்றாள்.

### பொதுமொழி

- பொதுமொழி ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்து, தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது பொதுமொழி எனப்படும்.

  **எ. கா.**
    - ✓ எட்டு - எட்டு என்ற எண்ணைக் குறிக்கும்.
    - ✓ வேங்கை - வேங்கை என்னும் மரத்தைக் குறிக்கும்.
- இவையே எள் + து எனவும் வேம் + கை எனவும் தொடர்மொழிகளாகப் பிரிந்து நின்று எள்ளை உண், வேகின்ற கை எனவும் பொருள் தரும்.
- இவை இருபொருள்களுக்கும் பொதுவாய் அமைவதால் பொது மொழியாகவும் இருக்கிறது.